உ

சிவமயம்

சிவ பூஜா சங்கிரஹம்

இஃது

பழநி சைவ சித்தாந்த சரபம்

சிவஸ்ரீ

ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவடித் துணைகொண்டு

தொகுக்கப்பெற்றது.

தொகுத்தவர்

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியார்

தேவகோட்டை

1958.

உ
சிவமயம்

சிவ பூஜா சங்கிரஹம்

இஃது

பழநி சைவ சித்தாந்த சரபம்

சிவஸ்ரீ

ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவடித் துணைகொண்டு
தொகுக்கப்பெற்றது.

தொகுத்தவர்

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.
மெய்யப்ப செட்டியார்
தேவகோட்டை

1958.

பதிப்புரை.

முன்னர் சிவபூசா முறைஎன்னும் புத்தகம் எளியேனல் தொகுத்து வெளியிடப்பட்டது அந்நூலினைக்கண்ட அன்பர்கள் அதிற் கூறியுள்ள விளக்கங்களின் மிகுதியாலும் என்பால் அன்புகூர்ந்து பல பெரியோர்கள் அனுப்பிய ஆசியுரைகள் வாழ்த்துரைகள் முதலிய தொகுப்புகளினுலும் புத்தகம் அளவிற் பெரியதாகத் தோன்றியமை கண்டு. காட்சி யளவையிலேயே சிவபூசா விஷயத்தில் மலை வுறத் தொடங்கினர்கள்.

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மன வாக்காயம் ஆனிடத்தைந்துமாடும் அரன் பணிக்காகவே என்னும் பேருண்மையுணர்ந்த எங்கள் குருநாதர் சீடர்களுக்குப் பூசனை எழுந் தருளச் செய்து தருங்கால் அவர்கள் மனம் சிறிதும் தளர்வுருமல் மிக எளிய முறையில் அவ்வப்போது போதிக்கும் பெற்றியினைக் கண்ணுற்ற யான் அம்முறையினை அன்னாரின் திருவடித்துணை கொண்டு ஓர் தொகுப்பாக்கிச் சிறிய அளவில் வெளியிட்டுள்ளேன், கற்றறிந் தடங்கிய பெரியோர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

சேவு. மெய்யப்பன்.

முன்னுரை.

டரங் கருணைத் தடங்கடலாய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து அநுக்கிரகம் செய்வது பரார்த்தம்- ஆன்மார்த்தம் என்னும் இரண்டு இடங்களிற் செய்யும் பூசைகளிலாகும். பரார்த்த பூசைக்கு அடிப்படையாயிருந்து அதற்குரிய யோக்கியதையைக்கூட ஆன்மார்த்த பூசையே வழங்கு மென்பது சிவாகமங்களிற் கண்ட உண்மை.

இதனாலேயே சைவ பரம்பரையில் தோன்றியவர் அனைவரும் முறையாகச் சற்குருவை அடைந்து தீட்சை பெற்று ஆன்மார்த்த பூசையை விடாது செய்து வரல் வேண்டுமென்று ஆன்றோர்கள் அருளிச் செய்தார்கள்.

இந்நூலை எழுதி யுதவிய சைவ சித்தாந்தப் புரவலர் மெய்யப்ப செட்டியாரவர்கள், சிவாகம ஞானபாநுவாகத் திகழும் எங்கள் குருமூர்த்தி சிவ ஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்களிடம் சமய – விசேட– நிருவாண தீட்சைகளைப் பெற்றுச் சிவ

பூசையை நியமந் தவருது பேரார்வத்துடன் செய்து வருவதும் "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் திருமூலர் திருவாக்கிற் கிணங்க அன்பர்களை யெல்லாம் சிவபூசா துரந்தரர்களாக ஆக்கும் ஆர்வம் மிகுந்தவர்களாய் இருப்பதும் உலக மறிந்தவைகளாகும்.

அருட் செல்வத்துடன் பொருட் செல்வமும் மிகுந்த இந்நூலாசிரியர் அவர்கள் "சிவபூசை முறை" என்னும் பெயரிய விரிவான நூலொன்று முன்பு வெளியிட்டதை ஒட்டிச் "சிவபூசா சங்கிரகம்" என்னும் இந்நூலை இப்பொழுது வெளி வெளியிட்டுள்ளார்கள்'

பெரியதிற் பெரிய- சிறியதிற் சிறிய இறைவனை விரிவாகவும், சுருக்கமாகவும், பூசனையாற்ற நூல்களெழுதி யுதவிய இவர்களுக்குச் சைவ வுலகம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. இவர்களுக்குத் திருவருளாலும், குருவருளாலும் எல்லா நலங்களும் மென்மேலும் உண்டாவதாக.

பாலகவி

வே. இராமநாதன் செட்டியார்

தேவகோட்டை,

11. மந்திரங்கள்

ஓம் ஈசான மூர்த்தாய நம:
,, தத்புருஷ வக்த்ராய நம:
,, அகோர ஹ்ருதயாய நம:
,, வாம தேவ குஹ்யாய நம:
,, சத்யோஜாத மூர்த்தயே நம:
,, ஹ்ருதயாய நம:
,, சிரஸே நம:
,, சிகாயை நம:
,, கவசாய நம:
,, நேத்ரேப் யோ நம:
,, அஸ்த்ராய நம:

அபிஷேக மந்திரம்

மிருத்யுஞ் ஜயாய ருத் ராய நீலகண்டாய சம்பவே. அம்ருதே சாய சர்வாய மஹா தேவாயதே நம:

மூலமந்திரங்கள்:- குருமுகமாக உணர்ந்து கொள்க:

உ
சிவமயம்

சிவபூஜா சங்கிரஹம்

1. சூர்யபூஜை

கரந்யாஸம்:— இருகரதலங்களையும், உள்ளும் புறமும் அஸ்திர மந்திரத்தால் வலது கரத்தை ஒரு முறையும் இடது கரத்தை இரண்டு முறையும் துடைத்து. சிவ சூர்யாய வௌஷட்" என்று கும்பிட்டு

1. அம் ஹ்ருதயாய நம: பெருவிரல்
2 அர்க்காயசிரஸே நம: சுண்டுவிரல்
3. ஜ்வாலிநீ சிகாயை நம: மோதிரவிரல்
4. "ஹ்ரீம் கவசாய நம:" நடுவிரல்
5. "பம். பானுநேத்ரேப். யோ நம:" உள்ளங் கையில் மடங்கிய சுட்டு விரல்
6. 'ர:'. அஸ்திராய நம: மறுபடி பெருவிரல்

இவைகளைத்தொட்டு. கவசாய நம: என்று கைகளைச் சுற்றி "சிவ சூர்யாய வௌஷட்" என்று கும்பிடவும்.

அங்கந்யாஸம்:— மேலேகண்ட, முதல் 5 மந்திரங்களால் ஹ்ருதயம், சிரசு, சிகை, இரு தோள்களைத் தொட்டு 6வது மந்திரத்தால் சுட்டு விரல் நடுவிரல்களைக் கொண்டு நேத்திரங்களிரண்டைத் தொட்டு அத்திரத்தால் உள்ளங்கைகளைத் தொட்டு திக்பந்தன அவகுண்டனம் செய்து. "சிவசூர்யாய வௌஷட்" என்று மகாமுத்திரை கொடுக்க.

அர்க்கியம்:- அர்க்கிய பாத்திரத்தை அஸ்திரத்தால் சுத்திசெய்து இருதயத்தால் நீர் பூரித்து சந்தனம் அக்ஷதை சிவப்புப்பூ சேர்த்து இரு முழந்தாள் ஊன்றிப் புருவ நடுவரை கொண்டு போய் அமிர்தம் கலந்த தாகப்பாவித்துக் கீழே வைத்து மேற்கண்ட 6 மந்திரங்களால் அர்ச்சித்து அம்மந்திரங்களால் அபி மந்திரித்து அஸ்திர மந்திரத்தால் தன்மேலும் சூர்யபூஜை சாமான்கள் மேலும் தெளித்து சுத்தி செய்க,

பின்.

சூரியபூஜை யந்திரத்தில்:—

"தண்டி நே நம:" 'பிங்களாய நம:"
"கணபத யே நம:" குருவே நம:"
"விமலாய நம:" ஆராத்யாய நம:"
"பரமசுகாய நம:" "பத்மாய நம:"
தீப்தாதி தேவதாப்யோ நம:
அர்க்காஸ நாய நம:
கஷோல் காய அர்க்கமூர்த்தயே நம:
சிவ சூர்யாய நம:
உஷாதேவ்யை நம:
பிரத்யுஷா தேவ்யை நம:

சுற்றிலும்

1 சோமாய நம: 2. புதாய நம:
3. குரவே நம: 4. பார்க்கவாய நம:
5. அங்கார காய நம: 6. சனேஸ்சராய நம:
7, ராஹூவே நம: 8. கேதவே நம:

எனப் பத்திரம் வைதது்த் தூப. தீபம், காட்டி நைவேத்யம் செய்துகர்ப்பூரம் காட்டிப் "பிரத் யக்ஷ தெய்வமான சூர்யமூர்த்தியே! சிவ பூஜைக்கு விக்னமில்லாமல் சாக்ஷியாக இருந்து முடித்துத் தரவேண்டும்" எனப் பிரார்த்தித்துப் பராங்முக அர்க்கியம் கொடுக்கவும். தேஜஸ் சண்டாய நம: என ஈசானத்தில் பத்திரம் வைத்துத் தூபதீபம் காட்டிச் சூர்ய நிர்மால்யம் நிவேதித்துக் கர்ப்பூரம் காட்டி சூர்யபூஜா பலனைத் தரும்படி பிரார்த்திக்கவும் ("எல்லா வுலகமும்" ஆனாய் நீயே)

சூர்ய பூஜை முற்றிற்று

★

சிவ பூஜை

ஆசமனம் செய்து திருநீறு அணிந்து கரந்யாச அங்கந்யாசம் செய்துகொண்டு

"கணபதயே நம:" என்று குட்டிக்கொண்டு "குரவே நம:" என்று கும்பிட்டு "கங்காயை நம:" என்று தீர்த்தச் செம்பில் அக்ஷதை சந்தனம் புஷ்பம் சாத்தி அர்ச்சித்து

மஹா லக்ஷ்ம்யை நம: என்று தீபத்தில் பூசித்து.

சாமான்ய அர்க்கிய பாத்திரத்தை அஸ்திரத்தால் சுத்தி செய்து இருதயத்தால் நீர் பூரித்து, பிரணவத்தால். 7 முறை அர்ச்சித்து அபிமந்திரிக்கவும்.

1. கணபதயே நம: 2. சரஸ்வத்யை நம:
3 மகாலக்ஷ்ம்யை நம: 4. நந்திநே நம:
5. கங்காயை நம: 6. மகா காளாய நம:
7. யமுநாயை நம: 8. ரிஷபாய நம;
9. அஸ்திர துவார பாலேப்யோ நம:
10. வாஸ்துவாதி பதயே பிரம்மணே நம:

எனப்பத்திரம் கிள்ளி வைத்து "துவாரபாலேப் யஸ் வாஹா" என அர்க்கியம் விடவும்.

கரந்யாஸம் மட்டும் செய்துகொண்டு பிராணா யாமம் 11 மந்திரங்களால் செய்து ஹ்லாம் என 5 முறை சொல்லி நிவிருத்தி

கலாயை ஹ: ஹூம்பட்

ஹ்வீம். என 4 முறை சொல்லி பிரதிஷ்டா

கலாயை ஹ: ஹூம்பட்

ஹ்ரூம் என 3 முறை சொல்லி வித்யா

கலாயை ஹ: ஹூம்பட்

ஹ்யைம் என 2 முறை சொல்லி சாந்தி
கலாயை ஹ: ஹூம்பட்
ஹௌம் என 1 முறை சொல்லி சாந்தியதீத
கலாயை ஹ: ஹூம்பட்,

எனச் சொல்லிப் பத்திரத்தைத் தலைக்குமேல் எறிந்து வலக்கால் பெருவிரல் நுனியிலிருந்து அக்நிபுறப்பட்டுச் சரீரம் பூராவும் தஹித்ததாகப் பாவித்துச் சத்தியனுக் கிரஹத்தால் அமிருத மழை பொழிந்ததாகக் குளிர்மை செய்து அங்கந் யாஸம் செய்க.

அந்தர் யஜனம்:- அகத் தாமரையின் கண்ணே பெருமானை நினைத்து எழுந்தருளச் செய்து.

சிவாஸ நாய நம:— சிவமூர்த்தயே நம:
சிவாய நம:— ஹ்ருதயாய நம:
சிரஸே நம:— சிகாயை நம:
கவசாய நம:— அஸ்திராய நம:

என அஷ்ட புஷ்பங்களால் மனத்தில் பூசித்து தூப தீப நைவேத்யாதிகள் மானஸீகமாகச் செய்து வணங்கி "வெளியில் பூசிக்க அனுமதி தரவேண்டும்" என்று பிரார்த்திக்கவும்

லிங்க சுத்தி:- பீடத்தில் அனந்தாய நம: தர்மாய நம: ஞானய நம: வைராக்யாய நம: ஐஸ்வர்யாயநம: என்று பூசித்து லிங்கத்தை எழுந்தருளச் செய்து சாமான்ய அர்க்கியத் தாலும் பின்னர் விசேட அர்க்கியத்தாலும் அபிஷேகித்துத் துடைத்துச் சந்தனம் விபூதி குங்குமம் புஷ்பம் சாத்திப் பீடத்தில் எழுந் தருளச் செய்யவும் இதை ஆதம பூஜைக்கு பின் செய்யவும்.

விசேடார்க்கியம்:- பாத்திரத்தை அஸ் திரத்தால் அலம்பி இருதயத்தால் நீர்பூரித்து சந்தனம் அக்ஷதைபுஷ்பங்களைச் சேர்த்து ஈசா னம் முதல் அஸ்திரமீருக 11 மந்திரங்களாலும் ஆசனமூர்த்தி மூலத்தாலும் பூசித்து ரக்ஷாவ குண்டனம் தேனுமுத்திரை கொடுத்து அந்த ஜலத்தால் எல்லா திரவியங்களையும் புரோக்ஷிக்

கவும் கொஞ்சம் அபிஷேக ஜலத்திலும் சேர்க்கவும்.

ஆத்மபூஜை:- தன் ஆசனத்தில் சிவாசநாய நம: என்று பூசித்துச் சந்தனம் நெற்றியிலும் மார்பிலும் வைத்து. மார்பில் சிவமூர்த்தயே நம: என்று பத்திரம் ஒட்டித் தலையில் சிவாய நம: என்று புஷ்பம் வைக்கவும்.

— குரு வணக்கம் —

சுவாமிக்கு வடக்கே.

கணேச கமல குருபாதுகேப் யோ நம: எனப்பூசித்து

லிங்கத்தின் வலது பக்கத்தில்
ஓம் கணபதயே நம:

இடது பக்கத்தில்
ஓம் சரவணபவாய நம:

எனப்பத்திரம் சாத்திப் பீடத்தில்
யோக பீடாஸ நாய நம:

ஆதார சக்த யே நம:
அனந்தாய நம:
தர்மாய நம: ஞானய நம:
வைராக்யாய நம: ஐஸ்வர்யாய நம:
அதச்சதனுய நம: ஊர்த்துவச்சதனுய நம:
பத்மாஸ நாய நம: விமலாஸ நாய நம:
சிவாச நாய நம: எனப் பூசித்து
சிவ மூர்த்த யே நம: எனப்புஷ்பம் சாத்தி

சிவபெருமான் திரு உருவை மனதில் நன்கு தியானித்துச் சிவாய நம: என ஆவாஹனம் ஸ்தாபனம், ஸந்நிதானம் ஸந்நிரோதனம் அவகுண்டனம் திக்பந்தனம் தேனு முத்திரை கொடுத்து "ஸ்வாமி நல்வரவா" என்று கேட்டு "குழந்தாய் சுகமாக வந்தோம் என்று சுவாமி சொன்னதாகப் பாவித்துப்" பூசை முடியும் வரை இந்த லிங்கத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும்" எனக் கேட்டுப் பிரார்த்தித்து

பாத்யம்—சிவாயநம: 2 தடவை
ஆசமனம்—சிவாயஸ்வதா. 3 தடவை

அர்க்கியம்—சிவாயஸ்வாஹா 1 தடவை கொடுத்து. சந்தனம் அக்ஷதை புஷ்பம் அறுகு சாத்தி அஸ்திரத்தால் மணி அடித்து ஈசானத்தால் தூபமும் நேத்திரத்தால்தீபமும். காட்டி ஆசமன அர்க்கியம் கொடுத்துப் புஷ்பாஞ்சலியால்ஆத்மதத்வாதிபதயே சிவாய நம. வித்யாதத் வாதிபதயே சிவாய நம: சிவதத் வாதி பதயே சிவாய நம:

என்ற மூன்று மந்திரங்களாலும் பிறகு மூலமந்திரத்தாலும் சாத்தி சுவாமிக்கு இடது பக்கத்தில் லிங்க ஆவுடையாரில் "ஓம் கௌர்யை நம: என்று பூசித்து முன் போல் ஆசன மூர்த்தி மூல ஷடங்கங்களால் பூசித்துத் தூபதீபம் காட்டி ஆசமன அர்க்கியம் கொடுத்து நைவேத்யத்தை அஸ்திரத்தால் புரோக்ஷித்து கவசத்தால் நீர் சுற்றிச் சுவாஹாந்த மூலத்தால் 7 முறை நிவேதித்து பாத்ய ஆசமன அர்க்கியம் கொடுத்துக் கர்ப்பூரதீபம் காட்டி. ஆசாரியர் உபதேசித்த

மந்திரத்தை 51 உருவுக்குக் குறையாமல் ஜபித்துப் புஷ்பம் அக்ஷதை ஜலத்துடன் சுவாமி வலது கையில் கொடுத்து—அக்னிதிக்கில் தனது குருவின் பாதுகைகளை எண்ணித் திருமுறை ஓதி, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து. "சுவாமி பிழைகளை பொறுக்க வேண்டும்" எனப் பிரார்த்தித்துச் சுவாமி முதல் எல்லா தேவதைகளுக்கும் ஸ்வாஹா என்ற முடிவுடன் கூடிய அந்தந்தப் பெயர்களால் பராங்முக அர்க்கியம் கொடுத்துச் சுவாமியை இருதயத்தில் ஒடுக்கவும்

ஈசான மூலையில் பத்திரத்தில் சந்தனம் வைத்து. "தொனிச்சண்டாய நம:" என அர்ச்சித்து சுவாமி நிர்மால்யம் சாத்தி மேற்படி நிர்மால்ய நிவேதனம் தூபதீபத்துடன் செய்து கர்ப்பூரம்காட்டி. சிவபூசாபலனை யாசித்து ஸ்வாஹாந்த மூலத்தால் பராங்முகார்க்கியம் கொடுக்கவும் அர்க்கியங்களை அஸ்திர மந்திரத்தால் ஒன்றுசேர்த்து ஒடுக்கிப் பூசாஸ்தலத்தை சுத்தம் செய்து திருநீறு அணிந்துகொள்ளவும்.

திருச்சிற்றம்பலம்

உ

தோத்திரங்கள்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை
யுள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினாலிட
வல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்
வீரட்டனாரே.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

போற்றியோ நமச்சிவாய புயங்கனே
மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம்
பிறிதொன்றில்லை

போற்றியோ நமச்சிவாய புறமெனைப்
போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சய சய
போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர்
மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற நஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண்குளிர்ந்தனவே,

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு

"பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்

ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே
யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே"

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

எண்ணிலாகம மியம்பிய விறைவர்தாம்
விரும்பும்
உண்மையாவது பூசனை. யெனவுரைத்த ருள
அண்ணலார் தமை யர்ச்சனை புரியவா
தரித்தாள்
பெண்ணினல்லவ ளாயின பெருந்தவக்
கொழுந்து

திருச்சிற்றம்பலம்

வாழ்த்து

வையநீடுக மாமழை மன்னுக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்



விநாயகர் பிரஸ், காரைக்குடி.